


# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 சித்திரை 29 (12-5-74) | இதழ்: 43


★

உள்ளே......


படமும் பாடமும் (2)

(அறிஞர் அண்ணா)

★

பரணி

(இலக்கியப்)

★

அவர் ஒரு சகாப்தம்

(கட்டுரை)

★

விடைபெறுகிறோம்

(சிறுகதை)


★

விலை: 0-25 காசு

# அருந்தவப் பிறப்பே போற்றி!

(பாவலர். எழிற்கோவன்)

செந்தமிழ்ச் சுவையே! இன்பச்
சீர்தரும் கலையே! அன்பின்
வந்தனச் சிலையே! எம்மை
வாழ்த்துமோர் மலையே! எங்கள்
சிந்தனைச் சுடரே! மாற்றார்
சுரண்டலின் இடரே! என்றும்
சுந்தரப் புதிரே! "அண்ணா"
சொற்பெயர்த் திருவே போற்றி!

கடமையின் வடிவே! காணும்
கலைகளின் முடிவே! தோன்றும்
மடமையின் நஞ்சே! பொங்கும்
மாத்தமிழ் நெஞ்சே! யாவும்
கடந்ததோர் நிலையே! அன்பின்
களஞ்சியச் சிலையே! என்றும்
தொடர்ந்திடும் புகழே! வாழும்
தொல்முதற் பொருளே போற்றி!

கண்ணிய மணியே! நாட்டைக்
காத்திடும் அணியே! பாடும்
பண்ணினின் இசையே! வீரம்
பகர்ந்திடும் விசையே! காஞ்சி
மண்ணினின் மணப்பே! அல்லல்
மாய்த்திடும் நெருப்பே! செம்மைப்
பண்பினின் தலையே! பாடும்
பைந்தமிழ் முதலே போற்றி!

எளியவர் சிரிப்பே! காணும்
இறைவனின் குறிப்பே! மக்கள்
களிப்பினின் விரிப்பே! நாட்டைக்
காத்திடும் உழைப்பே! உள்ளம்
தெளிவுறும் அழைப்பே! ஊக்கம்
உணர்த்திடும் பொறுப்பே! இன்பம்
அளித்திடும் சிறப்பே! ஆளும்
அருந்தவப் பிறப்பே போற்றி!

# அவர் ஒரு சகாப்தம்

இளவை பா. வரதன்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப் பட்டுக் கிடந்த அருந்தமிழகத்தில் புரட்சிப் புயல் வீசச் செய்த புத்துலகச் சிற்பி தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு முழக்கங்களை பட்டிதொட்டியெல்லாம் பரப்பிய ஒப்புயர்வற்ற பெருமை காஞ்சி தந்த கருத்துக் கருவூலமாம் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு உண்டு என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது!

பொதுப்பணி—மக்கள் தொண்டு என்பது இடர்மிகுந்ததாகவும்—இன்னல் நிறைந்ததாகவும் இருந்து வந்த இருட் காலத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும்—எந்தச் சூழ் நிலையிலும் எத்தகைய பயங்கரமான கொடுமைகளும் நடக்கலாம் என்றிருந்த மிக ஆபத்தான காலகட்டத்தில்—எதிர்ப்புக்கும் ஏசலுக்கும் அஞ்சாமல்—புகழ்ச்சிக்கும் — பூசலுக்கும் இதயத்தை அடகு வைத்திடாமல்—பொறுப்புடனும் சிறப்புடனும் — பொன்றுப் புகழுடனும் பொதுநலத்தொண்டு ஆற்றிய மகத்தான மனிதகுல மேதை அறிஞர் அண்ணா அவர்கள் தான் என்னும் மிகச் சிறந்த பேருண்மையை எவர்தான் எளிதில் மறுத்துவிட முடியும்?

கூனன் நிமிர்ந்து நின்றதும்—குருடன் கண்பார்வை பெற்றதும்—ஊமை கோடையிடி முழக்கம் செய்யப் புறப்பட்டதும்—

செவிடன் ஏழிசை நாதம் கேட்டு எக்காளமிட்டு துணிந்து செயல்பட ஆரம்பித்ததும்—அறிஞர் அண்ணா அவர்கள் தென்னகத்து அரசியல் உலகில் அடியெடுத்து வைத்த பின்னர் நடந்த அதிசயங்கள்—ஏற்பட்ட மாறுதல்கள் என்பதை அவரின் அரசியல் பகைவர்கள்கூட தயக்கமில்லாமல் தடுமாற்றமில்லாமல் ஒப்புக்கொள்வர்!

எளிமை—இனிமை — தன்னடக்கம்—பணிவு—நாகரிகம் என்பன போன்ற இன்னோரன்ன பிற உயர் பண்புகளில் மிகச் சிறந்து ஒளிவீசித் திகழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை விஞ்சக் கூடியவர்கள் நாம் வாழ்ந்து வருகிற இந்த இருபதாம் நூற்றாண்டில் இருந்ததாக—இருப்பதாகக் குறித்துக்காட்ட எந்த ஒரு மனிதரும் இல்லை. நான்குகோடி தமிழர்களின் நாயகன் என்று வெறி உணர்வுடனும்—பாச உள்ளத்துடனும் அழைக்கப்பட்ட போதும் துளிக்கூட கர்வம் என்பதே இல்லாமல் மிக மிக எளிமையாக வாழ்ந்து வந்தார். ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் அற்புதமாகவும் அனுயாசமாகவும் சொற்பொழிவாற்றவல்ல அந்த நாவுக்கரசர் தமிழக சட்டமன்றத்திலும்—டெல்லி மாநிலங்கள் அவையிலும் ஆற்றிய உரைகள் யுகயுகத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடிய ஜீவசக்தி வாய்ந்தவை!

*1962 மே திங்கள் முதல் நாள்!* அன்றுதான் பாடுபடும் பாட்டாளி மக்களின் உன்னதத் திருநாள்! கண்ணைப் பறிக்கும் மின்னலுக்கும்—காதைத் துளைக்கும் இடிக்கும் காலமெல்லாம் ஈடுகொடுத்து உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன தொழிலாளி இனம் மகிழ்வுததும்ப உற்சாகம் வழிந்தோட கொண்டாடும் எழுச்சித் திருநாள்!

அன்றையதினம்தான் தமிழர்களின் தானைத்தலைவர் தளபதி அண்ணா அவர்கள் வரலாற்றில் இடம்பெற்று விட்ட தத்துவ சிந்தனைகளை—புரட்சிக் கருத்துக்களை—அடக்கி ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக் குரலினை தெளிவாகவும்—விளக்கமாகவும்—திட்பமாகவும்—நுட்பமாகவும் — டெல்லி பாராளுமன்ற மேலவையில் போர் முழக்கம் செய்த மகத்தான நாள்!

"I belong to Dravidian stock. I am proud to call myself a Dravidian. Dravidians have got something concrete, something district, something different, to offer to the world at large."

"I assure this House that if you do not put dampers on our progress—I assure this House that if you do not bring in legal repressions. We are the next ruling party in Madras."

(13-ஆம் பக்கம் பார்க்க)

# விலைவாசி உயர்வுக்கு பொறுப்பு மத்திய அரசே!

மாநில அரசு நோய் தீர்க்கும் டாக்டரின் நிலையில் அல்லாமல் கம்பவுண்டரின் நிலையிலேயே உள்ளது. மத்திய சர்க்காரோ முதல் வகுப்பு டாக்டரின் நிலையில் உள்ளது.

மாநில அரசோ மத்திய அரசோ அல்லது தனியார் துறையினரோ யாராக யிருப்பினும் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படாது தவிர்த்திட ஏதாகிலும் செய்தாக வேண்டுமென்று உணர்ந்துள்ளனர். இந்த உணர்வு மிக முக்கியம். இந்த உணர்வு ஏற்பட்டுள்ளது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நோய்க்குக் கூறப்படுகிற மருந்துகளும், சிகிச்சை முறைகளும் மாறலாம். ஆனால் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படுவதே முக்கியம்.

இந்த அரசும் இதை நடத்திச் செல்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் தனது மக்கள் நலப் பணியில் மக்களது ஆதரவினை நாடுகின்றன. மக்களுக்கு மூன்று வேளைச் சோறுவது அவர்கள் திருப்தியடையும் வகையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் நோக்கம். பொருளாதார லாப-நட்டப் புள்ளி விவரப் பட்டியல் மக்களுக்குப் புரியாதது.

எனவே சாதாரண மக்கள் தாங்கள் முன்னை விட வலிவுடன் இருக்கிறோம் உடல் நலமுடன் இருக்கிறோம், என்ற உள்ள நிறைவோடு இருக்கத்தக்க வகையில் பணிகள் நடைபெற ஒத்துழைப்பு இருக்குமென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

பொருளுற்பத்தி செழிக்க உள்நாட்டு மார்க்கெட் வலிவானதாக இருக்கவேண்டும். அது வளராது பொருளுற்பத்தி மட்டும் பெருகுவதால் அதன் முழுப் பலனையும் அடைய இயலாது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் நல்ல நோக்கத்துடன் கூடியவைகளே. ஆனால் அதனால் விளைந்த பலன்கள் நாம் எதிர்ப்பார்த்தபடி இல்லை. திட்ட இலக்குகளுக்கும் அசல் சாதனைகளுக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. அரசியல் மேடைகளைப் பார்த்தால் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை மட்டும் பட்டியல் போட்டுக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்வார்கள். அசல் சாதனைகள் இன்னதென்று சொல்ல அஞ்சுவார்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அது பிறப்பதற்கு முன்னே இரண்டு வயதை அடைந்துவிட்டது. இன்னும் அந்தரத்தில் நிறுத்தாமல் அந்தத் திட்டம் என்னென்ன என்பதை நாம் தெரிவித்தாக வேண்டும்.

எந்தத் திட்டமாயினும் விவசாயத்தைப் பலமுடையதாகச் செய்யக் கூடியதாகவே அமைய வேண்டும். இது அனைவராலும் இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. இவ்வாறு விவசாயத்தை பலப்படுத்துவோமானால் இந்நாட்டுப் பொருளாதாரம் புத்துயிர் பெறும். புது வலிவு பெறும்.

விரைவான நற்பலன்களைக் கொடுக்கக் கூடிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதில் தமிழக அரசு நெருங்கிய அக்கறை கொண்டுள்ளது.

இவ்வகையில் மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு இப்போது தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இத்தகைய உடனடிப் பலன்களை அளிக்கக் கூடிய திட்டங்களுக்காகவே தமிழக அரசு கடன் எழுப்பியுள்ளது. இக்கடனுக்குத் தாராளமாகக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவைப் பொறுத்தமட்டில் நாம் உபரி மாநிலம் என்ற நிலையை அடைந்துவிடுவோமானால், நமது மாநிலம் தொழில் வளத்தை நோக்கி முன்னேற அதுவே ஒரு உந்துகோலாக அமையும்.

உற்பத்தியைப் பெருக்கும் காரியத்தில் ஒரு மாநில சர்க்கார் ஈடுபடுகிறதென்றால் ஏற்படும் நஷ்டத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விலை ஏற்றத்திற்கு முழுப் பொறுப்பை ஏற்க வேண்டியது மத்திய சர்க்கார்தான்! என்ன காரணம்? பணவீக்கம் ஏற்படவும் அதனால் விலைகள் உயரவும் காரணமாக இருப்பது மத்திய சர்க்கார்தான்.

[பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு]



# அன்று பிள்ளைத் தமிழ்

கவிஞர் தமிழ்ச்சாமி

## 3. தாலப் பருவம்

### 1

கரியைப் பரியைத் தேரைந்தைக்
கவியை நடனக் கன்னியரைக்
கல்லாய்ப் போகக் கடவதெனச்
சபித்த கலைஞன் பல்லவனும்
திரியைப் போட்டு நல்லுறவுத்
தீப மேற்றிக் கையேந்தி
தேசச் சரித வேடமர்ந்த.
சீனப் பயணி யுவான்சியாங்கும்
அரிய பெரிய கருத்தடக்கி
"அர்த்த சாத்தி ரம்"யாத்திட்(டு)
அரசன் மௌரி யனரியணை
அமர்த்தி வாழ்சா ணக்கியனும்
வரிசைப் பெற்ற கச்சிநகர்
வாழ்வே! தாலோ தாலேலோ!
வயங்குங் குறள்செய் வள்ளுவனின்
வடிவே! தாலோ தாலேலோ!

### 2

இரக்கந் தன்னைக் கண்காண
இறைவன் படைத்த நல்லுருவம்
எளிய புத்தர் அவர் கொள்கை
எங்கும் பரப்பு மத்தலந்தான்
குரவர் நால்வர் போற்றவொரு
குறவர்த் தலைவன் மகள்புணரும்
குகனைப் பெற்ற ஏகம்பன்
குறைகள் போக்கு மத்தலந்தான்
புரக்குந் துறையேற் றுயிரனைத்தும்
புரக்க அவதா ரமெடுத்துப்
பொல்லோர் மாய்த்துப் புகழாரம்
பூண்டு காக்கு மத்தலந்தான்
வரம்பில் தலமே கச்சிநகர்
வாழ்வே! தாலோ தாலேலோ
வயங்குங் குறள்செய் வள்ளுவனின்
வடிவே! தாலோ தாலேலோ

### 3

(வேறு)

நாடு நகரம் பட்டித் தொட்டி
நடக்கும் பொற்றேரே!
நதியாம் தமிழில் பொன்னினை யெடுத்து
நல்கும் தென்காற்றே!
ஈடு பூமியி லில்லையென விலக்கியம்
இயம்பும் பைங்கிளியே!
இம்மண் முதன்மொழி செந்தமிழ் என்றே
இசைக்கும் மாங்குயிலே!
வாடும் முகத்தினை மலர்த்தி நடம்புரி
வண்ண மாமயிலே!
மாற்றார் போரினை வென்றிடும் முழையின்
வந்திடும் கானரியே!
சாடுங் காரிருள் அண்ணு துரையோய்
தாலோ தாலேலோ!
தமிழ்த்தாய் வளர்த்த தலைமை மகனே!
தாலோ தாலேலோ!

### 4


உச்சி யிமயம் முக்கொடி நாட்டிய
உரவோர் மரபுதித்தோய்!
உறவுக் கரந்தந் துரிமைக் காத்திடும்
உன்னத போர் முரசே!
கச்சிக் குறிஞ்சியி லூற்றெடுத் தகன்று
கால்கொண் டோடியிளங்
கன்னித் தமிழக முல்லையில் நடந்துறு
கானம் பலபாடி
நச்சி இந்திய மருதமின் பத்தினை
நாடி வளம்பரப்பி
நானில நெய்தலில் கலந்திடும் நதியே!
நலமிகு புத்துலகத்
தச்சா! தென்னக மக்களின் அச்சே!
தாலோ தாலேலோ!
தமிழ்த்தாய் வளர்த்த தலைமை மகனே!
தாலோ தாலேலோ

### 5

உள்புகுந் துளத்திருள் உலகெலா
உதய சூரியனே! [மோட்டிடும்
உறுமெனு புடுக்களு டேநுழைந் துலவிடும்
ஒண்கதிர் வெண்ணிலவே!
பள்ளம தோடிநற் பயிரினை வளர்த்திட
பாய்ந்திடும் புதுபுனலே!
படகினைச் செலுத்துவோ ரிருளினில் திசை
பகர்ந்திடும் விண்மீனே! [யினைப்
தள்ளிடும் சிறையெனி லஞ்சிடா சிங்கமே!
தாலோ தாலேலோ!
தமிழ்த்தாய் வளர்த்த தலைமை மகனே!
தாலோ தாலேலோ!

(வளரும்)

# தம்பிக்கு மடல்



## தம்பி !

“கண்ணே! காதற்கனியே! இன்னும் ஓர் திங்களில் நான் வந்து சேருகிறேன். தென்றலும் திங்களும், தென்மொழியாளே! உன்னைத்தான் வாட்டுகின்றன என்று எண்ணாதே; என்னை அவை இரண்டும் ஈட்டியெனக் குத்துகின்றன. எனினும், என் அன்பே! உனக்கு, முத்துமாலையும் தங்க வளைகளும், உன் அழகுக்குத் தக்கதான அணிபணி பலவும் பூட்டி அழகு கண்டு பெருமைப்படத்தானே, நான் இங்கு அல்லும் பகலும், கொல்லும் நினைப்பினையும் ஒருபுறம் நிறுத்திவைத்தபடி, பாடுபல பட்ட வண்ணம் இருக்கிறேன். பால்வண்ண நிலவே! விரைவில் வருகிறேன்! நான் உனக்குக் கொண்டுவர இருக்கும் அணிகளை அணிந்து கொண்டு, அன்னமென நீ நடந்துசெல்ல, ஆரணங்குகள் பலரும் உன்னைக்கண்டு பெற்றுள் பெருமைக்குரிய மணாளனை! அதனால் அழகு மயிலாள் ஆனந்தவாழ்வு பெற்றாள்! என்று புகழ்ந்துரைக்கக்கேட்டு, அன்று உன்னை, முதன் முதலாகமுந்திரிச் சோலையிலே, அந்திசாயும் வேளையிலே தொட்டிழுத்து முத்தமிட்டேனே துணிவுடன், நீயும், துரையே! இதென்ன முடுக்குத்தனம் என்று கொதித்துக் கூறுவதுபோலத் துவக்கி, மறுகணமே புன்னகையுடன் என் மார்பகத்தில் சாய்ந்தனையே, அன்று கண்ட இன்பத்துக்கு இணையான இன்பம் பெறுவேன்! அதற்கே இந்தப் பிரிவு! அஞ்சாதே! நெஞ்சில் உறைபவளே! வழி மேலே விழிவைத்துக் காத்துக் கிடக்கிறாயே வஞ்சி! உன்னைவிட்டுச் சென்றவன், அப்படி என்னதான் கொண்டுவந்து உன்முன் குவித்திடப் போகிறானோ! என்று மகளிர்சிலர் எள்ளி நகையாடிப் பேசுவதாகக் குறித்திருக்கிறாய். கேலி பேசிய அந்தப் பாதிமதியினர், அகலக் கண் திறந்து ஆச்சரியம் கொள்ளத்தக்க விதத்தில், நான் உனக்கு, ஆடை அணி கொண்டுவந்து தருகிறேன். தந்து, உன்னிடமிருந்து பெறவேண்டியதைப் பெறுகிறேன்!!

பொருள், தேடச் சென்ற தலைவன், பிரிவாற்றாமைப் பெருந்துயரில் சிக்குண்ட தலைவிக்கு இதுபோலன்றோ மடல் எழுதுவான். ஏந்திழையின் உள்ளத்திலே எத்தனை எத்தனையோ சுவைமிகு எண்ணங்கள் கூத்தாடும். பிறகோர் நாள், திரும்பிய தலைவன் தலைவிக்கு எண்ணற்ற முத்தங்களைத் தந்துவிட்டு தத்தைமொழியாளே! உனக்கென நான் ஏதேதோ தேடிப் பெற்றுவர வேண்டுமென்று நான் படாதபாடுபட்டேன், எனினும் உன் அழகுக்கு ஏற்ற அணிபணி கொண்டுவந்தேனில்லை; முயன்று பார்த்தேன், முடியவில்லை! செல்வம் குவிந்திடும் செய்தொழிலால் என்று எண்ணினேன்; ஆனால் ஏய்ப்பவன் இழுத்த பக்கமே செல்வம் செல்கிறது; உழைப்பவனை உதாசீனம் செய்கிறது என்ற உண்மையைத்தான் கண்டேன்; உனக்கு ஏமாற்றம் தருகிறேனே என்று எண்ணும்போது, துக்கம் துளைக்கிறது, வெட்கம் வேலாகக் குத்துகிறது; என் செய்வேன்! என்றால், உனக்கென்று கொண்டுவர முடிந்தது இது ஒன்றுதான்” என்று கூறியபடி, அவளிடம் ஒரு கைவளையோ காலுக்குத் தண்டையோ, கூந்தலிற் செருகிக்கொள்ள ஒரு திருகோ, கழுத்திலே

## படமும் பாடமும் (2)

பூட்டிக்கொள்ள ஒரு மாலையோ, மட்டும் கொடுத்திடுகிறான் என்றால், அவன் இதய ராணி, "செச்சே! இதுதானா! இவ்வளவு தானா! உமது ஆற்றல் இதற்குத்தானா பயன் பட்டது! இந்த இலட்சணத்துக்கா, ஈராறு மாதங்கள் உழைக்கிறேன். உழைக்கிறேன்—கொண்டுவந்து குவிக்கிறேன் குவிக்கிறேன் என்றெல்லாம் கூறிக்கூறி என்னை ஏய்த்து வந்தீர்! எங்கோ வெளியூர் சென்றிருக்கிறார் மணவாளர், எனக்காகக் கரியும் பரியும் கட்டித் தங்கமும் கல்லிழைத்த நகைகளும் கொண்டுவரப் போகிறார் என்றெல்லாம் கூவிக்கிடந்தாயே, விவரமறியாதவளே! உன் கணவன் கொண்டுவந்தது இதுதானா! என்று என் தோழிகள் கேலி பேசுவரே என்றெல்லாமா, பேசுவாள்! "அன்பே! திரும்பி வந்து உமது அன்பைப் பொழிந் தீரே, அது போதும் எனக்கு! உமது புன்ன கையை எனக்களித்து விட்டீர், அதனினும் மேலான அணியும் பணியும் அவனியில் உண்டா? இந்த நகைகூட, எனக்கு நீர் கொண்டு வந்திராவிட்டாலும், நான் வருத் தப்பட்டிருக்க மாட்டேன்! எனக்கு, ஏதேதோ அணிபணிகள் பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக அல்லவா, கண்காணா நாடு சென்று கடினமான உழைப் பிலே ஈடுபட்டீர். எவ்வளவு அன்பு, உமக்கு என்னிடம் என்று எண்ணும் போதே என் உடல் புளகாங்கிதமாகி விடுகிறது—என் றல்லவா? கூறுவாள்.

அதுபோலத்தான் தம்பி! நூறு இடங் களுக்குமேல் தேர்தலில் போட்டியிட்ட நாம் 15 இடங்களை மட்டுமே பெறமுடிந்தது, என்று துக்கத்துடனும் வெட்கத்துடனும், எடுத்துக் கூறும்போது, நாட்டிலுள்ள நல்லோர், ஆயாசப் படவேண்டாம்! கிடைத்தது குறைந்த அளவு என்றால் என்ன! உங்கள் முயற்சியின் தரத்தையும் திறத்தை யும் கண்டு நாங்கள் மகிழ்கிறோம்! பெற்ற வெற்றி, பெற்றிருக்க வேண்டிய வெற்றியை கவனப்படுத்துவதாக அமைகிறது கவலைப் படவோ, கலக்கமடையவோ அல்ல! என்று கூறி, நம்மை ஊக்குவிக்கிறார்கள், உற்சாகப் படுத்துகிறார்கள்! நமக்கு—அதிலும் குறிப் பாக எனக்கு இவ்வளவு குறைந்த அளவு மட்டுமே கிடைத்ததே என்ற எண்ணம் ஒவ்வொரு கணமும் நெஞ்சைக் குடைகிறது —என்றாலும், இந்த வெற்றியை எங்ஙனம் காதலன் கடும் உழைப்புக்குப் பிறகு, கொண்டு வந்து கொடுத்திடும், கைவளை யையோ, காதணியையோ, அன்பின் காணிக்கை என்ற முறையில், காதலிபெற்று அகமகிழ்ந்து பூரிப்படைவாளோ, அது போலவே நாம் பதினைந்தே இடங்களிலே மட்டுமே பெற்ற வெற்றியை, நல்லோர், பெருமைக்குரியதாகக் குறிப்பிட்டு, நம்மைப் பாராட்டுகிறார்கள்.

மலையைக் கல்லி எலியைப்பிடித்தனர்! என்று நம்மைப்பற்றிக் கேவலமாகப் பேசு வோர் இருக்கத்தான் செய்கிறார்கள்—நாடு என்றால், நல்லதும் கெட்டதும், நொந்ததும் வெந்ததும் பலபட இருக்கத்தானே செய்யும். நல்லோர், கூறுவது, மலையைக் கல்லி, எலி யைப் பிடித்தார்கள் என்பதல்ல; மலையைக் கல்ல முடிந்ததே, கிடைத்தது எலிதானே என்று கவலைப்படத் தேவையில்லை; மலையைக் கல்லும் ஆற்றலையும் கல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் பெற்றீர்களல்லவா அது சாதாரணமானதல்ல; பெற்ற வெற்றி, இனிப் பெறவேண்டிய வெற்றிக்கு அச்சாரம் என்று கொள்ளுங்கள்; முறை புரிந்து விட்டது, இனி அடுத்த முயற்சி பலன் அதிகம் பெற்றுத்தரும், என்று கூறி வாழ்த்துகிறார்கள்.

மலையைக் கல்லினோம்—எலி தானே கிடைத்தது, என்று நானே கூடச் சிறிதளவு சோகமாகக் கூறும்போது, அந்த நல்லவர் கள், "இதற்கேன் கவலைப்படுகிறாய்! என்றுமே உன்னைப்பற்றியும் உன் முயற்சி களைப் பற்றியும் குறைத்து மதிப்பிட்டுக் கொண்டு, இழிமொழியைக் கக்கிக்கக்கி தமது நெஞ்சிலே உள்ளே பாரத்தைக் குறைத்துக்கொள்பவர்கள்தானே இப்போ தும், மலையைக் கல்லினார்கள் எலிபிடித்தார் கள் என்று ஏளனம் செய்கிறார்கள்—சொல்லட்டுமே அதனால் என்ன மலையைக் கல்லினார்கள், எலியைப் பிடித்தார்கள் என்று அவர்கள் சொன்னால், வலையை வீசி னார்கள் பாசியைப் பெற்றார்கள்; குப்பை யைக் கிளறினார்கள்; குண்டூசியைக் கண்டெடுத்தார்கள் என்று ஏதாவது திருப்பிச் சொல்லிவிட்டுப் போயேன், என்று கூடச் சொல்லித் தருகிறார்கள். நான்தான் தம்பி! பதில் கூறிக் காலத்தை வீணாக்கிக் கொள்வதில்லையே!! அதனால் மலையைக் கல்லி எலி பிடித்தார்கள்; மண்ணைக் கவ்வினார்கள், செம்மையாக உதைப்பட்டார்கள் என்றெல் லாம், சிலர் பேசுவது கேட்டு, பதில் அளித் திடாமல், அவர்கள் அவ்விதமாக பேசுவதை நாம், நமது கழகத்துக்கு எந்த வகையிலே பயன்படுத்திக் கொள்வது என்ற ஆராய்ச்சி யிலே ஈடுபடுகிறேன், அது பலன் அளிக்கிறது; நிச்சயமாகவே!!

நாடு, நாம் பெற்ற இடங்கள் பதினைந்து என்ற போதிலும், அது குறித்துத்தான் பேசுகிறது—ஏன் இவ்வளவு குறைவாகப் பெற்றார்கள் என்று ஒரு சாராரும்—இவ்வளவுதானா பெறமுடிந்தது என்று மற்றோர் சாராரும்—இவ்வளவுகூட எப்படிக் கிடைத்தது—என்று வேறோர் சாராரும் இவ்விதம் பல்வேறு வகையாக — நாடு பேசுகிறது!! இதன் பொருள் என்ன? நாட்டவரின் விழி, நம்மீது இருந்தவண்ணம் இருக்கிறது, என்பதல்லவா பொருள்!

அந்த 'நிலை'யை அடைவதென்பது, சாமான்யமானது அல்ல, என்பதை அரசியல் தெளிவு படைத்தவர் அனைவரும் அறிவர். அந்த 'நிலை'யைப் பெற முடிந்தது நமது கழகத்துக்கு, நாட்டு மக்கள் கூர்ந்து நோக்கி, மதிப்பிட்டுப் பார்க்கத்தக்க கட்டம் வந்திருக்கிறது என்பதனால்தான் நாட்டிலே உள்ள நல்லவர்கள், பதினைந்து இடங்களிலே நாம் பெற்ற வெற்றியை, காதலன் தன் காதலிக்குத் தந்த பரிசுப் பொருள் போன்றது என்ற முறையில் மகிழ்ந்து கொண்டாடி, வரவேற்பளித்து வாழ்த்துகிறார்கள்.

வாட்போரில் ஈடுபட்ட இரு வீரர்களில், வென்றான் ஒருவன், வீழ்ந்தான்; மற்றவன் என்றால், வீரமரபு அறிந்தவனாக வென்றவன் இருந்தால் வீழ்ந்தவனை கேலி செய்யமாட்டான்; வீழ்ந்துவிட்டான் இம்முறை எனினும், அவன் நல்ல திறமை பெற்றிருக்கிறான், மிக மிகக் கஷ்டப்பட்ட பிறகே அவனை வீழ்த்த முடிந்தது. வீச்சுமுறை நேர்த்தியாக இருக்கிறது. மேலும் சிலகாலம் பயிற்சி இருந்தால், நம்மை நிச்சயம் வீழ்த்தியிருப்பான் என்று எண்ணிக்கொள்வான். இடி இடியெனச் சிரித்து, ஏடா மூடா, என்னிடமா போரிடத் துணிந்தாய்! என் வாள் வீச்சுக்கு முன்பு நீ எம்மாத்திரம்? பிழைத்தோடிப்போ! இனி, உன் கரத்தால் கத்தியைத் தொடாதே!—என்று கடுமொழியைச் செருக்குடன் வென்றவன் பேசுகிறான் என்றால், அவன் வீர மரபு அறியாதவன் என்று விவேகிகள் கூறுவர், தம்பி! வென்றவன் நம்மைப்பார்த்து வீழ்ந்தவனே! என்று கேலி பேசிடக்கூட இல்லை! ஆனால் 'வென்றவனுடன் இருந்தோம்' என்பதைப்பெறுவதற்கரிய விருது என்று எண்ணிக்கொள்பவர்கள், நம்மை கேலி பேசுகின்றனர், வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா! செம்மையாக விழுந்தயா அடி!! ஹை, ஹை! ஹி, ஹி! ஹா, ஹா! என்று கூவுகிறார்கள்—அதனை வீர முழக்கம் என்று வேறு எண்ணிக்கொள்கிறார்கள்.

(வளரும்)


# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

**சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.**

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**


| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.



# பரணி

[ஏ. கே. வில்வம்]

அடிவானில் விடிவெள்ளி முளைக்கின்ற வேளை; இரு தோள்களையும் வலுவாக்கி உறைவாளின் கூர்பார்த்தான்—வரும் பகையைக் கிழிக்கின்ற புலிக்குணத்துக் காளை!

புதுநிலவாம் அவன் மனைவி, எழில் பொங்கி நிற்கும் பருவத்துக் கிள்ளை; ஆம்—கிளிதான் அவள் பெயர். பூமியிலே அப்பேரழகு மழலையாய் உதித்தபோது அதன் உதட்டினிலே தேங்கி நின்ற சிவப்பைக் கண்டு பெற்றவர்கள் அப் பெண்வடிவுக்கு இட்ட பெயர் கிளி யாகும்!

பொல்லாத பகை மேகம் இவன் எல்லை மிதிக்க—போர் அலைகள் காளையரின் உருவினிலே, அலை அலையாய்—மலையெனவே திரண்டுவிட்டதாலே-கிளம்பினான் "கிளியே! விடைகொடு! கிழித்து மீள்கிறேன் பகைக் குலத்தை!" என்கின்ற உறுமலோடு.

உள்ளமெலாம் 'அவன்' உருவை நிறுத்திவிட்ட அக்கிளியும், புலிபோல—புகை நெருப்பு வீசுகின்ற மலைபோல—போர்க்கோலம் பூண்டுவிட்ட கண்ணாளன் நிலைகண்டாள்; அவள் நீலவிழிக் கூட்டினிலே நீர்முத்துக்கள் அரும்பு காட்டி நின்றன.

"போடா மகனே போருக்கு" என்றிடும் தமிழ்க் குணம் உண்டு அவளிடம், ஆனால் துடிக்கும் இதழுக்கும் துவளுகின்ற இடையினுக்கும் யார் பதில் சொல்லுவது?

கண்ணில் நீர் பெருக—கட்டழகு சோர்வடைய—"என்ன அத்தான்! போய் வந்த களைப்பு இன்னும் தீரவில்லை; போர் தந்த வடு இன்னும் ஆறவில்லை; யார் அத்தான், இதற்குள்ளே முரசறைந்துவிட்டார்கள்—இரணகளத்தில் பிணமலையைக் குவிப்பதற்கு! காவல் மரம் வெட்டினரோ? உம் காவலனை ஏசினரோ? தூசிப்புகையாக உம் காலடியில் தோய்ந்துவிட மோதிக்கொண்ட அப்பகைக் கூட்டம் எதுவோ? பல்லவரா—பாண்டியரா—பழிக்கஞ்சாச் சாளுக்கியரா—யார் அத்தான் கூறுங்கள்!"

வடிவழகி கேட்டாள் வழிகின்ற விழிகளோடு.

"விலைகொடுத்து வாங்கிவிட்டான், தமிழ் இனத்துப் பகையதனை!"

"யார் அத்தான்!"

"கலிங்கத்தான்"

"கலிங்கத்தானா......"

"ஆம் கண்ணே! கருணாகரத் தொண்டைமானையே 'களம்வா' என்றானாம்; பாரேன் நீயும்—இனி மிச்சம் இருக்கவா போகிறது அவன் உடலில் எலும்புக் கூட்டம்!"

கிளியைச் சேர்த்தணைத்தான். சந்தன மேனியில் முகம் புதைத்தான் சங்கு நிகர் கழுத்திலே இதழ் பதித்தான் 'இச்' சென்ற ஒலி பிறந்தது, வீரன் பறந்தான்.

கிளியின் வடிவேல் விழி இரண்டும் ஒரு முறை சுழன்றன.

ஃ ஃ ஃ

இதற்குள்ளே வீதிக்கு வீதி போர்ப்பாட்டு! வீட்டுக்கு ஒரு மகனை நாட்டுக்கு எனத்தந்த தாய்க்குலமும்—தமிழ்க் குடியும் விடுதலைச் சேனைக்கு வாழ்த்துக் கூறின.

பல துளி பெருவெள்ளமாகி ஊர் எல்லையிலே பெருங்கடலாய் ஆர்ப்பரித்து நின்றது—பகைவர்களின் தளபதியாம் எங்கராயன் எங்கே என்ற முழக்கத்தோடு!!

வெள்ளத்தோடு ஒரு வெள்ளமாய்—வீரனும் வாளோடு நுழைந்துவிட்டான்.

படை சென்ற பாதையெல்லாம் ஏற்பட்ட தூசிப்படலம் விழியடைக்கும்—வாய் அடைக்கும்— ஆனாலும் அணிவகுப்பின் கூச்சல் மட்டும் அடங்கவில்லை கலிங்கத்தான் தலைவாயில் மிதிக்கும்வரை.

இரு படைகளும் மோதிக்கொண்டனவாம்!

செயங்கொண்டார் சித்தரிப்பது போல் சொல்வதென்றால்—நம்மையெல்லாம் கிலி பிடிக்கும், ஆம்! குலை நடுக்கம் கொள்ளுகின்ற பயங்கரமான போர்க் கூத்தாம் அது!!

"தலை பத்தும் சிந்தினாலும் இலை உனக்கு சீதை!" என்றானமே தென்னிலங்கைக் கோமான்—அதுபோலக் கொதித்தானும் 'தொண்டைமான்' விருது பெற்ற கருணாகரன்.

தளபதியின் வலக்கரமாய் கிளிமொழியின் அத்தானும் பிண நாற்று நட்டான்; களமெல்லாம்! கைபட்ட பகையெல்லாம்!!

போர் உச்சக்கட்டம் அடைந்தது.

"எடும் எடும் எடுமென எடுத்ததோர்;
இகலொலி கடலொலி இகக்கவே;
விடுவிடுவிடுபரி கரிக் குழாம்"

மனிதப் புழுக்களைத் துவைத்துச் சாறெடுத்ததாம்.

"குருதியினதி வெளி பரக்கவே
குடையென நுரையென மிதக்கவே
கரிதுளி படமுட லடுக்கிலே
கரையென விடுபுடை கிடக்கவே."

அம்மவோ! எவ்வளவு பயங்கரம்! பிணப் புயல்—இரத்தச் சாரல்.

ஊற்றெடுத்த குருதி வெள்ளத்திற்கு—மிதக்கின்ற மனிதச் சக்கைகள் கரை கட்டின!!

எங்கிருந்தோ ஒரு வேல்—வீரனின் விலாவிற்கு குறிவைத்து வந்தது. அப்பொழுதுதான் தன் இருதயத்திலே சொருகிக் கொண்டிருந்த மறு வேலை எடுத்துப் பாயவந்த யானை யொன்றின் விழியிரண்டைப் பிடுங்கி நின்றான்.

வருகின்ற வேலுக்கு என்ன செய்வான். உடல்தனைச் சற்றே தாழ்த்தினான். அந்தோ! சீறிவந்த வேல் வீரனின் காலொன்றை அறுத்தெறிந்து விட்டுப் போயிற்று. அதே சமயம் அண்டம் தடம் புரண்டதுபோல் அதைத் தொடர்ந்து ஓர் யானை அவனை மிதிக்க—கொக்கரித்து வந்தது. சுற்றுமுற்றும் பார்த்தான் வீரன். உடைந்த ஒரு வேலாவது கிடைக்குமாவென்று! ஐயோ இல்லை!

"தமிழன் செத்தாலும் பாயவரும் பகையதனின் உயிர் குடித்தே சாவான் காண்பாய்!" எனச் சொன்னான். கிழித்தெடுத்தான் அறுபட்ட காலொன்றை, சுழற்றி விட்டான், அவ்வீரத் திருமகன் அங்கேயே சோர்ந்தும் வீழ்ந்தான்.

மோதவந்த மதயானையும்—மலைபோல, மாமல்லபுரத்துச் சிலையாகி நின்றது; அத் தமிழ்மகனின் வீரச் சாவுகண்டு!

ஃ ஃ ஃ

களம் சென்ற காதலனை எதிர்பார்த்து, தெருத் திண்ணையின் கம்பத்தைப் பற்றியபடி கிளி காத்திருந்தாள்.

மண்ணோடு மோதிக்கொண்டதால் அந்திவானத்தின் முகம் கூடச் சிவந்துவிட்டது.

களம் சென்று பகை முடித்த வீரரில் சிலர் திரும்பி வந்துகொண்டிருந்தனர்.

வந்த ஒருவனைப் பார்த்து கிளி கேட்டாள் "வீரனே! எங்கே என் அத்தான்!"

"களம் சென்ற உன் அத்தான்—களத்திலேயே செத்தான்; வீரச் சாவுதானம்மா—விழி நீரைத் துடைத்துக்கொள்!" அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை—அவளும்தான்.

களம் நோக்கிச் சென்றாலாம் அக்கனிக் கொடி! அங்கே கண்டாளாம்; அங்கம் ஒரு திசையாக அறுபட்டு மிதிபட்டு ஆலைவாய் சிக்கிவிட்ட கரும்பதனின் உடல் போல—கீழே கிடந்த தன் காதலனை!

"கிளியே! என்ற வாய் எங்கே?" தேடித் தேடிப்பார்த்தாள்.

மண்ணோடு மண்ணாய் மணாளனின் வாய் முத்துக்கள் சிதறிக் கிடக்கும் கோரங் கண்டாள் 'கோ! வெனக் கதறி நின்றாள். ஆனாலும் அவள்கொண்ட சோகத்திற்கோர்—முத்தாய்ப்பு வைக்க முடியவில்லை செயங்கொண்டார் எனும் புலவரால்.

**பொருகடக்கை வாள் எங்கே?**
**பொங்கும் மணிமார் பெங்கே?**
**போர்க் களத்தில் எது கூறினும்—**
**புறங்கொடாப் படுவயிரத்—**
**தோள்கள் எங்கே? எங்கே?**

[கலிங்கத்துப் பரணி]

உடைந்த கரங்களை—உருண்ட தலைகளை—ஊற்றெடுக்கும் இரத்த ஆற்றை—உறைந்து கிடக்கும் பிணச் சேற்றை—இப்படிக் கேட்டாளாம்!!

★

# —விடை பெறுகிறோம்—

—சோலை நா. சீராம்—

வெண்மதி வானில் தவழ்ந்துவரும் நேரம்......எண்ணற்ற இதயங்கள் துடித்துக் கொண்டிருக்கும் அந்த வங்கக் கடலோரம், மணிமுத்துவும் பூங்கொடியின் வரவுக்காக துடித்துக் கொண்டிருந்தான்.

கடந்த இரு மாதங்களுக்கு முன், இதே இடத்தில்தான் பிரியா விடைபெற்று பிணைந்த உள்ளங்கள் பிரிந்தன—பெற்றோர்களின் இணக்கத்தைப் பெற.

குமரியாக வளர்ந்தவள், குழந்தையாக சிரிக்கும் பொழுது குருடனும் தெளிவுபெறும் போது, பூத்துக்குலுங்கும் புதுமலராம் பூங்கொடியின் புன்னகையில் மணிமுத்து அதை யுண்டதில் வியப் பொன்றுமில்லை.

காலமெல்லாம் எண்ணிக் களிக்கும் கல்லூரி வாழ்க்கையில்தான், சங்க இலக்கியங்களும் தங்கத் தமிழும் போற்றி வரும் காதல் காவியம் பிறந்தது.

நாடிவரும் தென்றலில் பாடிவரும் குயிலெனகூடிவரும் முகிற்கண்டு ஆடி வரும் கலாப மயிலென—உள்ளத்து உணர்வுகளை உதறிய வண்ணம் காதலெனும் இன்பப் பூங்காவில் உயிர்கள் இரண்டும் உறவாடின.

வாட்டமின்றி வாழ வகையுள்ள குடும்பத்தில் வேதங்கள் கூறும் வேதாந்தத்தில் வேண்டிய அளவு நம்பிக்கையுள்ள குடும்பத்தில்—சமுதாயம் புகழும் உயர் குடியில்—பிறந்தவன் மணிமுத்து. ஆனல் பூங்கொடியோ.......வறுமை—பஞ்சம்—பட்டினி எனும் வாடைக் காற்றை, பட்டம்—பதவி—பகட்டான வாழ்வு எனும் போர்வையால் தடுத்துக் கொண்டவர்க்கு உலகம் புகழும் சமத்துவத்தை சாடுபவர்கள்—உண்டதை செறிக்க உலாவரும் உத்தமர்கள்—நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள்.

இத்தகைய இருவேறு நிலைகளில் பிறந்தவர்கள், மாறுபட்ட நிலையை மறந்து மலரப் போகும் புதுவாழ்வை எண்ணி இன்பமெனும் பாதையில் இணையாக வலம் வந்தனர்.

இவர்களுடைய விருப்பத்தை பெற்றோர்கள் அறிந்ததும் பொங்கும் கடலாக—கொதிக்கும் கொப்பறையாக மாறிவிட்டனர். அதனுல் ஏற்பட்ட முடிவு........ "மானத்தை இழப்பதைக் காட்டிலும் மகனை இழப்பதே மேல்" இது மணிமுத்துவின் பெற்றோர்களின் முடிவு. பணத்தை இழப்பதைவிட பாசத்தை—பாசமுடன் வளர்த்த மகளை இழப்பதே மேல்." இது பூங்கொடியின் பெற்றோர்களின் முடிவு.

கலங்கிய கண்களோடு—குழம்பிய நெஞ்சோடு வந்து சேர்ந்த பூங்கொடியை தேற்றுவதற்குள் பொழுதே விடிந்துவிடும்போலிருந்தது. வேதனையில் செய்வதறியாது தவித்த சேயிழையாள் மணிமுத்துவின் நெஞ்சில் முகத்தை புதைத்துக் கொண்டு தேம்பி தேம்பி அழுதாள்.

இதோ பார் பூங்கொடி! புரிந்துக் கொள்ளாத போதும் பொருமைப்படும் போதும் மனிதன் முட்டாளாகிருன்; பொறுமையும் பொறுப்புணர்ச்சியும் இல்லாத மனிதன் வாழ்க்கையில் நிச்சயமாக முன்னேற முடியாது. ஒன்று சேர்ந்த நம்மை பிரிக்க இந்த உலகத்தில் எந்த ஒரு சக்தியாலும் முடியாது. இனத்தைக் காட்டியோ—பணத்தைக் காட்டியோ—மனதை மாற்றியோ நம்மை இனியாரும் பிரிக்க முடியாது. கலங்காதே! கற்றவள் நீயே கலங்குவது கல்விக்கே இழுக்கு" என்று மணிமுத்து வீரத்துடனும் விவேகத்துடனும் ஆற்றிய உரைகள் பூங்கொடியை தெளிவான நிலைக்கு கொண்டு வந்தன. மேலும், மணிமுத்து தேர்வில் வெற்றி பெற்றதையும், அதன் காரணமாக அவனுக்கு பணிபுரிய வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்திருப்பதையும்—நாளைக் காலையில் அவளை பதிவுத்திருமணம் செய்ய இருப்பதையும்—நாளை மாலை விமானத்தில் ஏறி இருவரும் வெளிநாடு செல்ல இருப்பதையும் —அதற்கான வேண்டிய ஆயத்தங்களையும் செய்து முடித்திருப்பதாகவும் கூறியதை கேட்ட பூங்கொடி இதயம் நிறைந்த இன்பத்தால் கயல்விழி மூலம் நன்றி கூறுகிருள்.

மறுநாள் காலையில், பதிவுத் திருமண அலுவலகத்தில் மணிமுத்து—பூங்கொடியின் சீர்திருத்த திருமணம் வெகு சிறப்பாக நடந்

தேறியது பண்பட்ட பாதையில் பாடிவந்த பறவைகள் திருமணமென்னும் கூடுகட்டி அதில் குடியேற துவங்கி விட்டன. எப்படியோ நடக்க வேண்டிய திருமணம் இப்படி நடந்தது இளம் தம்பதியர்களுக்கு கவலையாக இருந்தாலும்—பெற்றோர்களையும். உற்றார் உறவினர்களையும் உதறி தள்ளிவிட்டு இப்படி நடந்துக் கொண்ட விதம் விரக்தியாக—வேதனையாக—இருந்தாலும் "வாழ வேண்டும்" என்ற அடிப்படை ஆவல் ஆறுதல் அளிக்கிறது.

கடந்து வந்த பாதையில் நடந்துவந்த விளைவுகளை அவர்களுடைய இதயம் படமாக்கின. "மிகுந்த ஆவலினால் அருகில் வந்து "அண்ணா" என்றழைக்கும் அமுதா எப்படியிருப்பாள்? பாவம்! அவள்தான் எனக்காக பெற்றோர்களிடம் வாதாடியவள் ...'ம்'...என்ன செய்வது பிரிய வேண்டியது தான்" என்று பாசத்தால் மணிமுத்துவின் இதயம் உருகியது நோயில் படுத்த தாயும்—ஓய்வுப் பெற்ற தந்தையையும் நினைக்கும் போது, "கடவுளே! அவர்களை காப்பாற்று" என்று வேண்டிக்கொள்வான்.

கொடுமை நிறைந்த மாமனை திருமணம் செய்துக் கொள்ளும்படி பெற்றோர்கள் வாட்டிய நினைவுகள் பூங்கொடியை மெய் சிலிர்க்க வைக்கின்றன. 'அப்பாடா! எப்படியோ நான செய்த தவத்தால் என்னுடைய தெய்வத்தோடு சேர்ந்துவிட்டேன்" என்று நிறைவு தரும் நிம்மதியில் பெரு மூச்செறிகிறாள்.

வளர்த்துவிட்ட தாயகத்தினிடமும்—சான்றோர்களிடமும்—பழகி வந்த தோழர்களிடமும் பிரிந்து செல்லுவதற்காக மணிமுத்துவின் இதயம் மன்னிப்புக் கோருகிறது.

"பெற்றெடுத்த தாயகமே! பெருமைபடுத்திய தமிழ்த்திருநாடே! கற்றறிந்த சான்றோர்களே! ஏழை—எளியவர்களின் எண்ணற்ற போராட்டங்களை 'ஏப்பம்விடும்' செல்வந்தர்களே! ஆண்டாண்டு காலம் முடை நாற்றமடிக்கும் சமுதாயத்தை வளர்த்துவிடும் மாபெரும் மனிதர்களே! காதலைப்பற்றி வரிக்கு வரி "வாழ்த்துப் பா" பாடும் பாவலர்களே! "காதல்—அது ஒரு அணையா விளக்கு; தீர்ப்பில்லா நீண்டகால வழக்கு" என்றெல்லாம் எங்கும்—எதிலும் எழுதி மகிழும் எழுத்தாளர்களே! காதலின் தத்துவம் கூறி—காதலர்களின் இலக்கணம் கூறி—இலக்கியங்களை எடுத்துக் காட்டும் விரியுரையாளர்களே! இன்று நானும் என் மனைவியும் வெளிநாடு செல்கிறோம். ஏன் தெரியுமா? வளர்ந்துவரும் காதலை வாழ வைப்பவர்கள் இங்கில்லை; கலப்பு மணங்களையும்—மறுமணங்களையும் ஆதரிக்கும் பண்பட்ட உள்ளங்கள் இங்கில்லை. எங்களை ஊரும்—உலகும் தூற்றுகின்றன; பாசமும்—பணமும் துரத்துகின்றன. இவைகளை கண்டு அஞ்சியோடும் கோழைகள் என்று தயவு செய்து நினைத்து விடாதீர்கள் "துணிந்து விட்டால் துன்பங்கள் பணிந்துவிடும்" என்று எங்களுக்குத் தெரியும். இருப்பினும், எங்களுடைய பெற்றோர்கள் அவமதிப்பும்—பழிச் சொற்களுமின்றி வாழ-விடை பெறுகிறோம் காலங்கள் மாறும் என்ற நம்பிக்கையால்" என்று மணிமுத்துவின் இதயம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டது.

மாலை நேரம்; அதே வங்கக் கடலோரம் ...மங்கிய இருளில்—மயங்கிய நிலையில்—இருவரல்ல ஒருவரே என்ற அளவில் காதல் கிளிகள் உறவாடிக் கொண்டிருந்தன.

"பூங்கொடி"........ பொங்கிவரும் உணர்வுகளின் இன்னிசையால் தங்கிவரும் தணியாத தாகத்தால் தளிர்க் கொடியை தழுவிக் கொள்கிறான்..."ம்".....பூவிதழ் மெல்ல திறந்து மூடி பூவையவள் உடமையாகி—உரிமையளிக்கிறாள்.

"பூங்கொடி! வந்த நாட்களைவிட இந்த நாள் நம் வாழ்க்கையில் மறக்க முடியாத நன்னாள்! எனக்கு நீயும்—உனக்கு நானும் சொந்தமான திருநாள்! பெண்ணாக பிறந்தவள் பெருமைப்படவும் ஆணாக பிறந்தவன் ஆட்கொள்ளவும் சிறந்தநாள்! இணைந்த கைகள் இம்மியளவும் இறுகாமல் இறுதி வரை இப்படியே.....இப்படியே" மோகத்தால் மூச்சு திணறினான்.


"அத்தான்! இத்தனை நாள் பொறுத்திருந்தோம். இன்றும்—நாளையும் பொறுத்துக் கொள்ளுங்கள். நாளை மறுநாள் நாகரீகம் மிகுந்த அந்த நாட்டில் எல்லாம்.........வைத்துக் கொள்ளலாம்" என்று நாணத்தால் குறுகியவள் கூறிட—விமானத்திற்கு நேரமானதை இருவரும் உணர்ந்த வண்ணம் எழுந்து நடந்தனர்; ஏங்கிய உள்ளங்கள் எண்ணற்ற கனவுகளை காற்றில் கறைத்த வண்ணம் விரைந்துக் கொண்டிருந்தன.

அவர்களுக்காக காத்திருந்த விமானத்தில் ஏறிக் கொண்டனர். சமுதாயத்தின் வீணான விளையாட்டால்—இணைந்த உள்ளங்கள் இன்புற வாழ்க்கை யெனும் நீண்ட நெடும் பாதையில் பயணத்தை தொடங்கி விட்டனர்.

மறுநாள் காலையில் வெளிவந்த எல்லா முக்கிய செய்தித் தாள்களிலும் கீழ்கண்ட செய்தி இடம் பெற்றிருந்தது...

சென்னையிலிருந்து டெல்லி நோக்கிப் பறந்த விமானம், டெல்லியருகில் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்தவர்கள் ஒருவர்கூட உயிர் தப்ப முடியவில்லை".

# தமிழனின் பெருமிதம்!



## 3 வரிசைகளில்

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மொத்தப் பரிசுகள்: **7902**

மொத்தப் பரிசுத் தொகை:

# ரூ. 10,47,000

3 முதல் பரிசுகள்

# ரூ. 1,00,000 ஒவ்வொன்றும்

**66வது குலுக்கல் நாள்: 12-6-1974**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன். நான் என்னை திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். திராவிடர்களிடம் இந்த உலகிற்கு மிகுந்த அளவில் வழங்கிட தெளிவான மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட சில தன்மைகள் இருக்கின்றன." டெல்லிப் பட்டணத்தில் இந்த இன முழக்கத்தை அதுவரை எவரும் எடுத்துக்கூறியதற்கு எடுத்துக் காட்டு கிடையாது. எதிரிகளின் உள்ளம் புண்படாத வகையில் தம் கருத்தை ஏற்கச் செய்யும் ஆற்றலும் திறமையும் அண்ணாவிடம் மண்டியிட்டுக்கிடந்தது. இந்தியத் துணைக்கண்டத்தின் ஈடில்லாத வித்தகர்களையெல்லாம் விவாதத்தில் வெல்லக்கூடிய நூலறிவும் நுண்ணறிவும் நிரம்ப இருந்தது. இத்தகைய மகத்தான சிறப்பியல்புகள் நன்கு வாய்க்கப் பெற்ற அவர் தமிழகத்தின் முதலமைச்சரான பிறகும்கூட, தம்மை மிக மிகச் "சாமானியன்" என்று கூறிக்கொண்ட ஒப்பற்ற ஒரே தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

மலர்கள் மலர்கின்றன. மலர்ந்த மலர்கள் உலர்ந்து கீழே விழுகின்றன. பொழுது புலர்கின்றது. புலர்ந்தபொழுது அலர்ந்து இருண்டு விடுகின்றது. இது எழில்மிகு இயற்கையின் பொழில்மிகு தன்மை. அவ்விதமே எண்ணற்ற மக்கள் பிறந்தனர்; வாழ்ந்தனர்—மடிந்தனர். அந்த மக்களின் கல்லறைகள் ஆடிப்பெருக்கில் அடையாளம் கூட தெரியாமல் மறைந்தே போய்விட்டன! சரித்திரம் அவர்களுக்காக ஒரு துளிக் கண்ணீர் கூட சிந்தியது இல்லை. ஏன்! அவர்கள் தங்களுக்காக-உற்றார் உறவினருக்காக மட்டுமே வாழ்ந்தனர்! பாடுபட்டனர்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிமை வாழ்வு வாழ்ந்து வந்த தமிழர்களின் இன்னல் குறித்து இறுதிவரை சித்தித்த வண்ணம் பாடுபட்டு வந்தார். அல்லும் பகலும் அனவரதமும் அயராது உழைத்து வந்தார். தூங்காமை — கல்வி — துணிவுடைமை ஆகிய நற்பண்புகள் நன்கு அமையப் பெற்ற அண்ணா அவர்களின் பெயர் சரித்திரத்தில் என்றென்றும் பசுமையாக நிலைத்து நிற்கும் என்பதில் எவருக்கும் கிஞ்சித்தும் ஐயம் இல்லை! ❀


## தயாராகிறது!

# 'காஞ்சி'

## கலைஞர் பொன்விழா மலர்.

**பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்**
**கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின்**
**புகழ்மணம் பரப்பும் நன்மலர்,**
**இப் பொன்மலர்!**

முன்னணித் தலைவர்கள்
முற்போக்கு எழுத்தாளர்கள்
ஆகியோரது அரிய படைப்புக்களுடன்
மூவண்ண முகப்போடு சூன் திங்களில் வெளிவருகிறது!

தேவைக்கு உடன் தொடர்பு கொள்க:-

—மேலாளர் "காஞ்சி"
காஞ்சிபுரம் 631503.

# 'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

—புலவர் அரிமதிதென்னகன்

## 50. அய்யா மன்னிக்க

அவனுக்கு;
கோவணம் கட்டக் கற்றுக் கொடுத்தவன்,
ஆடை வாங்கிக் கொடுத்து, அணிவித்து மகிழ்ந்தவன்,
அதோ,
சவமாகி ஊர்வலம் போகின்றான்!!
அவன்,
இதோ,
'டைட்பேண்டும்' 'சிலாக்ஷர்ட்டு'மாக
சினிமாக் கொட்டகைக்குள்,
'விசில'டித்துக் கொண்டே
நுழைகின்றான்!!
இவையெல்லாம் தெரியாமல்,
தியாகம் செய்தவன் செத்தால் என்ன?
வாழ்ந்தால் என்ன? எப்படி என் தத்துவம்''

## 51. மூன்று பூனைகள்

எங்கோ இருந்து ஒரு 'பிராந்திபாட்டிலை' ஒரு பூனை எப்படியோ கீழே தள்ளி விட்டது.

சப்தம் கேட்டு இரண்டு பூனைகள் ஓடி வந்தன.

உருட்டிய பூனை தமிழ்நாட்டுப் பூனை!

ஓடி வந்தவை வெளிநாட்டுப் பூனைகள்!!

மூன்றும் கீழே ஓடிய பிராந்தியை நக்கிக் குடித்தன.

ஒரு பூனை சொல்லியது,

''கடவுள் என்னைப் பார்த்து 'நீதான் நாளையிலிருந்து கடவுள்' என்று சொல்லுகிறார்''

மற்றொரு பூனையோ,

''நான் ஒன்றும் உன்னைப் பார்த்து அப்படிச் சொல்ல வில்லையே'' என்றது.

மூன்றாவது பூனையோ,

''சீச்சி ஏன் குடித்து விட்டுக் கெட்டுப் போகிறீர்கள்?

இனிமேல் குடித்து விட்டுப் பாவத்திற்குப் போகாதீர்கள்'' என்றது.

நீங்கள் சொல்லுங்கள்!

மூன்றில் எது தமிழ் நாட்டுப் பூனை?

மூன்றாவது பூனைதானே!!

சும்மாவா சொன்னார்கள்

'பாம்பின்கால் பாம்பறியும்!' என்று

## 52. தாலி மகாத்மியம்

அந்த நடிகைக்கும், அவளால் கணவனாக வைத்துக் கொள்ளப் பட்டவனுக்கும் தீர்க்க முடியாத சண்டை.

பொறுமையாக இருந்த அவள் கணவன் கோபத்தின் உச்சிக்கே சென்று, ''நான் உனக்குத் தாலிகட்டிய கணவன்டி'' என்றான்.

அவனுடைய நினைவாற்றலை அவள் உள்ளம் பாராட்டியது.

ஆனாலும், அவள் அமைதியாகச் சொன்னாள்,

''தாலி கட்டியவர்களுக்கெல்லாம் நான் மனைவியாக இருக்க முடியுமா என்ன!!''

## 53. கம்பமும் விறகும்!

அது ஒரு கொடிமரம்.

''அடி உளுத்துப்போன பிறகும் இன்னும் விழாமல் கிடக்கிறோமே'' என்று அது தன் விதியை நொந்து கொண்டே நின்றது.

ஒருகாலத்தில்,

உயர்ந்து நிமிர்ந்து இருந்ததன் உச்சியில் 'சளார்...சளார்' என்று ஒலி எழுப்பிக் கொண்டிருந்த கொடியைத் தாங்கிக் குதூகலம் அடைந்ததுதான் அந்தக் கம்பம்.

என்ன கொடுமையோ!!

காலையில் ஒரு கொடி!

மாலையில் மற்றொரு கொடி!

நாளை எந்தக் கொடியோ?

என்று நாளும் ஒரு கொடியைத் தாங்குவது அதற்கு நாணத்தைக் கொடுத்தது.

கம்பத்தின் கவலை காற்றுக்குத் தெரிந்தது.

தன் வீச்சில் சற்று கடுமையைக் காட்டியது.

கம்பம், மூன்று துண்டுகளாக முறிந்த வீழ்ந்தது.

ஆமாம்!

கம்பம் விறகானது.

விறகு,

தூக்கிச் சென்ற ஒரு திருடனின் வீட்டு அடுப்பில் தீயாக எரிந்தது.

விறகின் உள்ளம் குளிர்ந்தது!!

இனிமேல்,

அது, கண்ட கண்ட துணிகளைத் தாங்க வேண்டியதில்லையே!!

ஃ

# வண்ணத்துப் பூச்சியின் வண்ணமிகு கோலங்கள்!

★ அசல் காஞ்சிபுரம்,

★ கும்பகோணம் மற்றும்

★ ஆரணி பட்டுப் புடவைகள்

நேர்த்தியான கைத்தறி பருத்திப் புடவைகள் ● வேட்டிகள் லுங்கிகள் ● துண்டுகள் ● கைக்குட்டைகள் ● வீட்டு அலங்காரத் துணி வகைகள். வண்ணத்துப் பூச்சியின் நெசவுகளே நவநாகரீகங்கள்!

வண்ணத்துப் பூச்சியின் கிளாசிக் ரெடிமேட் ஷர்டுகள் ❋ கவர்ச்சியான பட்டு டைகள் ❋ எல்லா வயதினரும் விரும்பும் நவீனங்கள்.

**கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!**

**கோ-ஆப்டெக்ஸ்**
கைத்தறி ஆடைகள்

காஞ்சி 12-5-74 Regd. No. M. 8326

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித்தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.